# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 15.07.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் பார்வையில் விருந்தோம்பலின் முக்கியத்துவம் மிகப்பெரும் அந்தஸ்தைப் பெற்றுள்ளது. திருக்குர்ஆனின் பல இடங்களிலும் வழிப்போக்கர்களுக்கும் கூட அவர்களுக்குரிய உரிமையை வழங்குங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். பிரிதோரிடத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி கூறும் போது விருந்தினர்கள் அவர்களிடம் வந்த சமயத்தல் பொறித்த கன்றுக்குட்டியை அவர்களுக்கு அவர்கள் வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நமது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள், '**எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை வைத்துள்ளாரோ அவர் விருந்தினரைக் கண்ணியப்படுத்த வேண்டும்**' என்று கூறினார்கள். அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பவருக்கு விருந்தினர்களை அவர் கண்ணியப்படுத்துவதும் கூட அவசியமானதாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. விருந்தோம்பல் என்பது இவ்வுலகக் கடமை மட்டுமல்ல. மாறாக அது ஈமானின் ஒரு அடையாளமாகும். இதை நிறைவேற்றுவது அவசியமானதாகும். விருந்தினர்களுக்கு மிக அதிகமாக கண்ணியம் வழங்க வேண்டும். மரியாதையுடன் அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

பிறகு இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், '**அல்லாஹ் மற்றும் இறுதிநாளின் மீது ஈமான் கொள்பவர்கள் விருந்தினர்களுக்குரிய ஆகுமான உரிமையை வழங்குங்கள்**' என்று கூறினார்கள். ஆகுமான உரிமை என்றால் என்ன? என்று அப்போது கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், 'ஒரு பகலும் ஒரு இரவும் விருந்தோம்பல் செய்வது' என்று கூறினார்கள். எத்தனை நாட்கள் விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்ற வரம்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிர்ணயித்திருந்தாலும் அதாவது மூன்று நாட்கள் வரை விருந்தோம்பல் செய்வது உங்கள் மீது கடமையாகும் என்று கூறியிருந்தாலும் குறைந்தபட்சம் ஒரு நாள் விருந்தோம்பல் செய்வது விருந்தாளிக்குரிய உரிமையாகும். மூன்று நாட்கள் வரை விருந்தோம்பல் செய்வது கடமையாகும். ஆனால் சில சூழ்நிலைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நீண்ட காலம் வரை பல நாட்களாக விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்திருந்தார்கள். அவர்களை சஹாபாக்களிடம் விருந்தினர்களாக ஒப்படைத்திருந்தார்கள். விருந்தோம்பல் முழுமையான கண்ணியத்துடனும் மரியாதையுடனும் செய்யப்பட வேண்டும் என்பது தான் அடிப்படையாக அவர்கள் கூறியிருக்கும் கருத்தாகும். இவ்வாறு ஏன் செய்ய வேண்டும்? என்றால் அது விருந்தினர்களுக்குரிய உரிமையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான ஷரீஅத்தையும் இறை கட்டளைகளையும் கொண்டு வந்ததால் எல்லா தரப்பு மக்களையும் எல்லா அம்சங்களையும் கருத்தில் கொண்டு போதனைகளை வழங்கியுள்ளார்கள். அவர்கள் சில வரம்புகளை நிர்ணயித்திருந்தும் கூட விருந்தினர்களுக்கு அவர்களது கடமைகளை நினைவூட்டுவதற்கே ஆகும். அவை இந்த ஹதீஸ்களில் வந்துள்ளன. இதுபற்றி நான் அடுத்து ஜுமுஆவில் கூறுவேன் – இன்ஷா அல்லாஹ்.

இப்போது எனது பொதுவான வழிமுறைக்கேற்ப நான் விருந்தோம்பல் செய்பவர்களுக்கும் டியூட்டி கொடுக்கின்ற பணியாளர்களுக்கும் சில விஷயங்களின் பக்கம் கவனமூட்ட உள்ளேன். விருந்தோம்பல் என்ற பண்பு எப்படிப்பட்டதென்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், '**அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் ஈமான் கொள்வதற்கு இது அவசியமானதாகும்**' என்று கூறியுள்ளார்கள். தனக்கு விருந்தோம்பல் செய்யப்பட வேண்டும் என்பது விருந்தினர்களுக்குரிய உரிமையாகும். பயணிகளுக்குரிய உரிமையை அவர்களுக்கு வழங்குங்கள் என்று அல்லாஹ் கூறியிருப்பதன் மூலமாக விருந்தோம்பல் என்ற

பண்பை நாம் மிக அதிகமாகப் பேண வேண்டும் என்ற கடமை நமக்கு இருக்கின்றது. மாநாடு நாட்களில் மட்டும் அல்லாமல் வீட்டிலும் கூட ஒரு அஹ்மதி முஸ்லிமுடைய விருந்தோம்பலில் ஒரு தனித்தன்மை தென்பட வேண்டும். மாநாடு தொடர்பாக நாம் கூறிக் கொண்டு இருப்பதால் ஒவ்வொரு பணியாளரும், மாநாட்டிற்கு வரும் விருந்தினர்களை தங்குகின்ற வீட்டில் உள்ளவர்களும் விருந்தினர்களுக்கு நாம் சரியான கண்ணியத்தையும் மரியாதையையும் வழங்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுவான பயணிகளுக்கே அல்லாஹ் இந்த அளவு உரிமையை வழங்கியிருக்கும் போது அல்லாஹ்வின் வழியில் பயணம் மேற்கொள்பவர்களுக்கு மிக அதிகமான உரிமை இருக்கின்றது. அவர்களுக்கு கண்ணியமும் மரியாதையும் வழங்க வேண்டும். அவர்களுக்குரிய உரிமையை வழங்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் அடுத்த ஜுமுஆவிலிருந்து U.K.-ன் ஆண்டு மாநாடு ஆரம்பமாவதை நாம் அறிவோம். மிகத் தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து விருந்தினர்களின் வருகை ஆரம்பமாகி விட்டது. இந்த விருந்தினர்கள் ஜமாஅத் அமைப்பின் கீழ் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வீடுகளிலும் இவர்கள் தங்குவார்கள். இந்த விருந்தினர்களுக்கு குறிப்பாக டியூட்டி கொடுக்கின்ற பணியாளர்கள் மிக அதிகமாக முக்கியத்துவம் வழங்க வேண்டும். அல்லாஹ்வுக்காக பயணம் மேற்கொண்டுள்ள முஹம்மதிய மஸீஹின் இந்த விருந்தாளிகளுக்கு நமது சக்திக்கேற்ப விருந்தோம்பலுக்குரிய உரிமையை வழங்க வேண்டும். இதற்காக முயற்சி செய்ய வேண்டும். உலகில் ஜமாஅத் பெரியதாக இருக்கின்ற நாடுகளில் அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் லங்கரின் விரிவான ஏற்பாடு இருக்கின்றது. U.K.-யும் அல்லாஹ்வின் அருளால் இந்த நாடுகளில் ஒரு நாடாகும். இப்போது ரப்வாவிற்குப் பிறகு எல்லாவற்றையும் விட விரிவான லங்கர் அமைப்பு U.K.-ல் தான் உள்ளது. காலத்தின் கலீஃபா இங்கிருப்பதால் இந்த விரிவான நிலை இருக்கின்றது. ஆனால் இங்கு தென்படும் நிரந்தரமான லங்கர் ஏற்பாட்டின் மிகப்பெரிய சிறப்பம்சம் என்னவென்றால் இந்த ஏற்பாட்டை செய்தவர்களில் பெரும்பாலார் தன்னார்வத் தொண்டர்களாக இருக்கின்றார்கள். பல வருடங்களாக மிகுந்த மகிழ்ச்சியுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் லங்கருக்காக அவர்கள் தங்களது நேரத்தை ஒதுக்கியுள்ளார்கள். ரப்வா மற்றும் காதியானிலுள்ள லங்கர் ஏற்பாடுகளும் விரிவாக இருந்தாலும் கூட அங்கு இதற்காக சம்பளம் பெறுகின்ற பணியாளர்கள் இருக்கின்றார்கள். ஆனால், U.K.-ல் இதற்காக நிரந்தரமாக பணியாற்றி வருகின்ற தன்னார்வத் தொண்டர்கள் உள்ளனர். இந்த வகையில் நிரந்தரமாக விருந்தோம்பல் செய்கின்ற இந்த கடமையை U.K.ஜமாஅத் சிறப்பாக நிறைவேற்றி வந்துள்ளது. சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. மாநாட்டு நாட்களிலும் இந்த கடமையை நமது பணியாளர்கள் மிகவும் அழகிய முறையில் நிறைவேற்றி வருகின்றார்கள். நினைவூட்டுவதற்காகவே இந்த விஷயங்களை நான் கூறுகின்றேன். ஏனென்றால், புதிதாக வருகின்றவர்களும் இந்த பணியில் கலந்து கொள்கிறார்கள். அல்லாஹ் இந்த வருடமும் எல்லா பணியாளர்களுக்கும் இந்த கடமையை சிறந்த முறையில் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

நமது பணியாளர்கள் செய்கின்ற இந்த விருந்தோம்பல் அல்லது இதற்காக மாநாட்டில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பார்த்து வெளியிலிருந்து வருகின்ற ஜமாஅத்தைச் சாராத மக்களும் முஸ்லிம் அல்லாத மக்களும் எப்போதும் சிறந்த தாக்கத்தைப் பெற்றுள்ளார்கள். இங்கும் மற்ற நாடுகளிலும் இந்த நிலையைப் பார்க்க முடிகின்றது. விருந்தோம்பல் செய்கின்ற பணியாளர்கள் வருங்காலத்திலும் அவர்கள் ஏற்படுத்திய இந்த தாக்கத்தை தொடர்ந்து நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். இது தப்லீகிற்குரிய வழியாகி விடுகின்றது. ஒரு வகையில் பார்க்கும் போது ஒவ்வொரு பணியாளரும் அவர் டியூட்டி கொடுக்கின்ற போது அஹ்மதிய்யத்தின் செயல் அளவிலான தப்லீகிற்குரிய வழியாக அவர் இருப்பார். ஒவ்வொரு பணியாளருக்கும் இது ஒரு மிகப்பெரிய கண்ணியமாகும். அல்லாஹ் எல்லா பணியாளர்களுக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

லங்கர் கானாவை தவிர மற்ற டியூட்டிகளும் உள்ளன. இயன்ற அளவு அவற்றையும் முழுமையான முறையில் நிறைவேற்ற முழுமையான முயற்சிகளைச் செய்ய வேண்டும். எவரிடம் எந்த பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அந்தப் பணிகளை அவர் முழுமையாகச் செய்ய வேண்டும். முழுமையான பொறுப்புணர்வுடன் அதை செய்ய வேண்டும். எவரிடம் எந்த டியூட்டி ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அதனை அவர்

சாதாரணமான ஒன்றாக நினைக்கக்கூடாது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு டியூட்டிக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும் போதுதான் எல்லா ஏற்பாடுகளும் சரியாக நடைபெற முடியும். இதனை ஒவ்வொரு பணியில் இருப்பவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதன் மூலம் எந்த இடத்திலும் எந்த துறையிலும் கடமையை நிறைவேற்றுவதில் குறை இருந்ததன் காரணமாக எந்தவொரு விருந்தினருக்கும் துன்பம் ஏற்பட்டு விடக்கூடாது. இந்த அடிப்படையான விஷயத்தை பணியில் இருக்கின்ற அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவற்றைக் கூறிய பிறகு இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தோம்பல் தொடர்பான சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன். இவற்றை சஹாபாக்களின் அறிவிப்புகள் அடங்கியுள்ள பதிவுகளிலிருந்தும் நான் எடுத்துள்ளேன். ஆனால் ஒவ்வொரு அறிவிப்பிலும் ஒரு விஷயம் ஒருமித்துக் காணப்படுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விருந்தினர்களுக்கு மிகவும் கண்ணியம் அளித்துள்ளார்கள். அளவு கடந்த கண்ணியத்துடனும் மரியாதையுடனும் ஒவ்வொரு விருந்தினருடனும் அவர்கள் பரிமாறினார்கள்.

**ஷேக் பத்ருத்தீன் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் ஷேக் அஸ்கர் அலி சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விருந்தினர்களுக்கு தாமே விருந்தோம்பல் செய்வதில் மிக அதிகமாக கவனம் செலுத்தி வந்தார்கள். சகோதரர் மர்ஹூம் ஹாபிஸ் ஹாமிது அலி சாஹிப் அவர்களுக்கு கவனமூட்டுவதற்காக விருந்தினர்கள் தொடர்பான எல்லா விஷயங்களையும் அன்னார் தெரிந்து வைத்திருந்தார்கள். விருந்தினர்களின் நிலைமைக்கேற்ப அவர்களுக்கு உடனடியாக உணவை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். 1902 -ல் நான் அஹ்மதாபாத்திலிருந்து காதியான் வந்த போது மர்ஹூம் நாதிர் ஷா சாஹிப் லாஹூர் ஸ்டேஷனில் அமர்ந்திருந்தார்கள். காதியான் வருவதற்காக எந்த Inter Class அறையில் அவர்கள் அமர்ந்திருந்தார்களோ அதில் தற்செயலாக நானும் வந்து அமர்ந்தேன். பிறகு நாங்கள் இருவரும் ஒன்றாக பட்டாலா வந்தடைந்த போது பெருமழை பெய்தது. இரயிலிருந்து இறங்கியதும் நாங்கள் குதிரை வண்டியை வாடகைக்கு அமர்த்தி அதில் ஏறி பயணம் செய்தோம். காதியானின் எல்லையில் திரும்பும்போதுதான் மழை நின்றது. தாருல் அமான் வந்தடைந்ததும் ஹஸ்ரத் சாஹிபின் கட்டளைக்கேற்ப புக் டெப்போ இருந்த அறையில் நாங்கள் தங்குவதற்காக இடம் தரப்பட்டது. அந்த அறை மர்ஹூம் ஹாமிது அலி சாஹிப் அவர்களின் செலவில் புதிதாக கட்டப்பட்டதாகும். எனது ஞாபகத்திற்கேற்ப காலையில் சிற்றுண்டியின் போது அருமையான அல்வாவும் இருந்தது. சிறப்பான உணவு வீட்டிலிருந்து அனுப்பப்பட்டது. ஹுஸூர் மர்ஹூம் ஷா சாஹிப் அவர்களிடம் உங்களுக்கு எவ்வித கஷ்டமும் இல்லையே என்று விசாரித்தார்கள். ஹுஸூர் அவர்கள் விருந்தினர்களுக்கு அளவு கடந்த கண்ணியத்தை வழங்கி வந்தார்கள்.

**மவ்லவி தில் பஷீர் சாஹிபின் மகன் மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

எனது தந்தையார் ஆரம்பகால அஹ்மதியாவார். அவர்கள் 1894 -ல் தனது மனைவியுடன் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சந்திப்பதற்காக காதியான் வந்தார்கள். தனது தாயாருடன் அந்த சமயத்திலேயே பைஅத் செய்தார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது சிறிய வயதில் எனது தாத்தாவிடமிருந்து கல்வி கற்று வந்துள்ளார்கள். எனது தாத்தாவின் மூன்றாவது மனைவியான எனது பாட்டி ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் சகோதரி என்று அழைக்கப்பட்டவர் ஆவார். அந்த சமயத்தில் நடந்த சம்பவம் ஏதாவது உங்கள் நினைவில் உள்ளதா என்று நான் எனது தந்தையாரிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், நாங்கள் எட்டு பேர் ஒரு நாள் பகல் வேளை உணவு சாப்பிடுவதற்காக மஸ்ஜிது முபாரக்கில் அமர்ந்திருந்தோம். அப்போது பள்ளிவாசல் சிறியதாக இருந்தது. 8 அல்லது 10 பேர் தான் ஒரு ஸஃப்பில் நிற்க முடிந்தது. எங்களுடன் ஹுஸூர் அவர்களும் முதலாவது கலீஃபா அவர்களும் இருந்தார்கள். இரண்டு விதமான குழம்புகள் இருந்தன. இரண்டிலும் இறைச்சி இருந்தது. ஹுஸூர் தனது குழம்பிலிருந்தும் சில சமயங்களில் இறைச்சியை எடுத்து மற்றவர்களது குழம்புகளில் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக வைத்துக்

கொண்டிருந்தார்கள். முதலாவது கலீஃபா அவர்களும் அவ்வாறே செய்து கொண்டிருந்தார்கள். விருந்தாளிகளில் ஒருவர் ஹுஸூர் இந்த சாப்பாட்டுடன் மாம்பழமும் இருந்தால் எப்படியிருக்கும்? என்று கேட்டார். அதற்கு அவர்கள் மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். இன்னொருவர் நான் பஜாரிலிருந்து நான் மாம்பழங்களை வாங்கி வருகிறேன் என்று கூறினார். அதற்கு அவர்கள் இங்கேயே இருங்கள் என்றோ அல்லது வேறு சொற்களையோ கூறினார்கள். என்ன கூறினார்கள் என்பது சரியாக எனக்கு நினைவில் இல்லை.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: இவ்வாறு நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு மனிதர் பட்டாலாவிலிருந்து மாம்பழங்களின் பார்சல் ஒன்றை கொண்டு வந்தார். அதில் 8 மாம்பழங்கள் இருந்தன. அவை பெரிய பெரிய பழமாக இருந்தது. எல்லாருக்கும் முன்பாக ஒவ்வொரு பழத்தையும் ஹுஸூர் அவர்கள் வைத்தார்கள். பிறகு ஒருவரிடம் கத்தியை தரும்படி கேட்டார்கள். கத்தி கொடுக்கப்பட்டது. பிறகு பழங்களை வெட்டுவதற்கு தரும்படி கூறினார்கள். ஒவ்வொரு பழத்தையும் வெட்டி அமர்ந்திருந்த ஒவ்வொருவரின் முன்னாலும் வைத்தார்கள். அவர்கள் அதிலிருந்து சாப்பிட்டார்களா என்பது எனது நினைவில் இல்லை.

அல்லாஹ் இந்த விருந்தாளிகளுக்கு எவ்வாறு விருந்தோம்பல் செய்துள்ளான்? ஒரு விருந்தாளி தமது விருப்பத்தைக் கூறியவுடன் அல்லாஹ் அதனை நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டையும் செய்து விட்டான்.

**மர்ஹூம் மவ்லவி கரம்தீன் சாஹிபின் மகன் ஃபஸ்ல் இலாஹி சாஹிப் கூறுகின்றார்கள்:**

இந்த எளியவன் லாஹூரிலிருந்து காதியானுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளேன். பெரும்பாலும் ஹஸ்ரத் முஃப்தி சாதிக் சாஹிபுடன் பயணம் மேற்கொண்டுள்ளேன். பலமுறை ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் என்னை உள்ளே அழைத்துச் செல்வார்கள். மிகவும் அன்புடன் பரிமாறியவாறு கீழே இறங்கி தேனீர் விருந்தோம்பல் செய்வார்கள். மஸ்ஜிது முபாரக்கில் ஹஸ்ரத் சாஹிபுடன் அமர்ந்தவாறு பலமுறை நான் சாப்பிட்டுள்ளேன். ஒருமுறை ஹுஸூர் அவர்கள் தனது உணவிலிருந்து இந்த எளியவனுக்கும் ஒரு பொருளை வழங்கினார்கள். ஒருமுறை மக்ரிப் தொழுகைக்குப் பிறகு மஸ்ஜித் முபாரக்கின் மேல் தளத்தில் கிழக்குப் பக்கம் பார்த்தவாறு அன்னார் அமர்ந்திருந்தார்கள். இந்த எளியவன் மேற்குப் பக்கம் பார்த்தவாறு ஹுஸூர் அவர்களின் எதிரில் அமர்ந்திருந்தேன். அப்போது கிழக்கிலிருந்து நிலா உதித்தது. அது 14 அல்லது 15ம் தேதியின் நிலாவாக இருந்தது. அப்போது ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய முகத்திலிருந்து ஒளியின் கதிர்கள் வெளிப்பட்டு அது நிலவின் கதிர்களுடன் மோதுவதை நான் கண்டேன்.

**மியான் சதருத்தீன் சாஹிப் அவர்களின் மகன் மியான் சிராகுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பெஷாவரைச் சார்ந்த ஷேக் முஸஃப்பருத்தீன் சாஹிப் அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விருந்துக்கு அழைத்தார்கள். அறை சிறியதாக இருந்தது. மக்கள் அதிகமாக வந்து விட்டார்கள். நான் ஹுஸூருக்கு அருகில் நின்று கொண்டிருந்தேன். உட்காருவதற்கு இடம் இல்லாமல் இருந்தது. ஹுஸூர் அவர்கள் தமது ஒரு காலை எடுத்து மற்ற காலின் மீது போட்டவாறு என்னை தனக்கு அருகில் அமர வைத்துக் கொண்டார்கள். பிறகு என்னுடன் சாப்பிடுங்கள் என்று கூறினார்கள். அப்போது நான் ஹுஸூர் அவர்களோடு அமர்ந்து சாப்பிட்டேன்.

**அப்துல் அலி கான் சாஹிப் அவர்களின் மகன் ஸுல்பிகார் அலி கான் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் வரும்போதெல்லாம் எனக்கு தரப்படும் உணவுகளில் நெய் சோறு கண்டிப்பாக இருக்கும். ஒருநாள் நான் மர்ஹூம் ஹாபிஸ் ஹாமிது அலி சாஹிபிட் எனக்கு இரண்டு வேளையும் நெய் சோறு தரப்படுவது ஏன்? என்று கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் முதல் முறையாக வந்த சமயத்தில் ஹுஸூர் அவர்கள் என்னை அழைத்து தாசில்தார் அவர்களுக்காக கண்டிப்பாக நெய் சோறு கொண்டு வாருங்கள்

என்று கட்டளையிட்டார்கள் என்று கூறினார். ஒருமுறை குர்தாஸ்பூரில் வைத்து எனது சமையல்காரரிடம் ஹுஸுர் அவர்கள், பிரியாணி சமைக்க வைத்தார்கள். அதன் மூலம் நான் பெரும்பாலும் இப்படிப்பட்ட உணவுகள் தான் சாப்பிடுவேன் என்பதை ஹுஸுர் தெரிந்து வைத்திருந்தார்கள். அதன் காரணமாக சமையல்காரரும் அவற்றை சமைக்க தயார் நிலையில் இருப்பதையும் அறிந்து வைத்திருந்தார்கள்.

அதாவது இவர் தாசில்தாராக இருந்த சமயத்தில் அவரை சந்திக்க ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சென்ற போது அங்கு பிரியாணி சமைக்கப்பட்டது. அது மிக சுவையாகவும் இருந்தது. இவர்கள் பெரும்பாலும் இதைப்போன்ற உணவுகளை சாப்பிடுவதால்தான் சமையல்காரரும் சுவையான பிரியாணியை சமைத்துள்ளார் என்பதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்க வந்ததும் அவர்களுக்கு விருந்தோம்பல் செய்யும் போது இவர்களுக்கு இரண்டு வேளையும் நெய் சோறு சாப்பிடுவதற்கு கொடுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

**மாலியர் கோட்லாவைச் சார்ந்த குல் முஹம்மது சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் பத்ருத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருநாள் இந்த எளியவன் எனது தந்தையாருடன் போர்டிங்கிலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தேன். அப்போது இரவு 9.00 மணியாக இருந்தது. இஷா தொழுகையும் முடிந்து விட்டது. அந்த சமயத்தில் ஹுஸுர் அவர்கள் தமது ஒரு கையால் ஒரு குவலையில் பாலும், பிரட்டும் ஏந்தியவாறு கிணற்றிற்கு அருகில் வந்தார்கள். எனது தந்தையாரிடம் பாபாஜி! ஏதாவது ஒரு விருந்தாளி பசியுடன் இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். அதற்கு எனது தந்தையார் ஹுஸுர்! மியான் நஜ்முத்தீன் எல்லா இடமும் சென்று கேட்டு விட்டு வந்துள்ளார். எல்லாரும் உணவு சாப்பிட்டு விட்டார்கள் என்று கூறினார். அப்போது ஹுஸுர் அவர்கள் நல்லது; என்னுடன் வாருங்கள் என்று கூறினார்கள். தந்தை, மகன் ஆகிய நாங்கள் இருவரும் ஹுஸுருடன் சென்றோம். விருந்தினர் தங்கியுள்ள இடத்திற்குச் சென்று விருந்தினர்களிடம் விசாரித்த போதும் எவரும் எங்களுக்கு கிடைக்கவில்லை. பிறகு நாங்கள் கடைக்காரரான ஷேர் முஹம்மத் சாஹிப் அவர்களின் கடையை அடைந்த சமயத்தில் அவரது கடை திறந்திருந்தது. அங்கு ஒருவர் ஹுஸுர் நான் பாலும் பிரட்டும் சாப்பிட வேண்டும் எனறு கூறினார். இதைக் கேட்ட ஹுஸுர் அந்தக் குவளையை அவருக்குக் கொடுத்தார்கள்.

விருந்தினர்களை இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தேடிக் கொண்டிருந்தார்கள். ஒரு விருந்தாளியின் விருப்பம் இதுவாகும் என அல்லாஹ் அவர்களுக்கு நிச்சயமாக தெரிவித்திருப்பான். அதனால்தான் அந்த விருந்தாளி விரும்பிய பொருளை தனது வீட்டிலிருந்து அவர்கள் கொண்டு வந்தார்கள்.

**சவுத்ரி பதர் பக்ஸ் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் நூர் அஹ்மது கான் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

எனக்கு ஆண்டு மாநாட்டின் போது காதியான் வர நேர்ந்தது. ஜலந்தர் மற்றும் ஹோஸ்யாபூர் ஜில்லாக்களைச் சார்ந்த எல்லா அஹ்மதிகளும் ஒரே இடத்தில் தங்கி இருந்தனர். காட்கட் என்ற இடத்தின் தலைவராக விளங்கிய சவுத்ரி குலாம் அஹ்மது சாஹிபும் எங்களோடு இருந்தார்கள். இரவு நேரத்தில் நாங்கள் காதியான் வந்து சேர்ந்தோம். தங்களது படுக்கைகளை அறையில் வைத்து விட்டு எல்லா சகோதரர்களும் அமர்ந்திருந்தார்கள். ஆனால் பாதி இரவு கழிந்த பிறகும் கூட எவருக்கும் உணவு வராமல் இருந்தது. மக்கள் மிகவும் பசியுடன் இருந்தார்கள். சவுத்ரி சாஹிப் அவர்களிடம் இதுபற்றி முறையீடு செய்து கொண்டிருந்தார்கள். இதுவரை உணவு கிடைக்கவில்லை என்று கூறினார்கள். இறுதியில் சவுத்ரி சாஹிப் அவர்கள் பஜாருக்குச் சென்று பால் குடித்து விட்டு வாருங்கள். ஆனால், இந்த அளவு நிம்மதியற்ற நிலையை உருவாக்காதீர்கள் என்று கூறினார்கள். மக்கள் உணவிற்காக காத்திருந்து காத்திருந்து சோர்ந்து போனார்கள். இறுதியில் பல நண்பர்களும் பசியுடன் தூங்கி விட்டார்கள்.

பாதி இரவிற்கும் மேலும் கழிந்த பிறகு இரவில் திடீரென்று சில நபர்கள் வந்தார்கள். அவர்கள், ஹஸ்ரத் சாஹிபிற்கு, விருந்தாளிகள் பசியுடன் உள்ளனர். அவர்களுக்கு உணவு கொடுங்கள் என இல்ஹாம் வந்துள்ளது. அதனால் எல்லா அறைகளிலிருந்தும் மக்களை தட்டி எழுப்பி இப்போது உணவு வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். எங்களது அறையிலும் சில நபர்கள் உணவு கொண்டு வந்தார்கள். சவுத்ரி சாஹிப் எல்லா நண்பர்களையும் தட்டி எழுப்பி அவர்களுக்கு உணவு வழங்கினார்கள். எங்களுடன் சவுத்ரி குலாம் காதிர் சாஹிபும் இருந்தார். அவர் இந்த உணவை இறைவன் நம்மை தட்டி எழுப்பி வழங்கியுள்ளான் என்று கூறியவாறு இந்த உணவில் எஞ்சிய சில துண்டுகளை பரக்கத்திற்காக இது இல்ஹாமிய உணவாகும் என்று கூறியவாறு அவற்றை தனது ஊரான சுடுவாவிற்கு எடுத்துச் சென்றார்.

நூர் மருத்துவமனையின் இன்சார்ஜ் ஆக இருந்த ஹஸ்ரத் டாக்டர் ஹஸ்மத்துல்லா கான் சாஹிப் நீண்ட காலம் வரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு சிகிச்சை அளித்து வந்துள்ளார். அவர்கள் வஃபாத் ஆகும்வரை அன்னார் அவர்களுடன் தான் இருந்து வந்தார்கள். அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஜமாஅத்தின் செயலர் என்ற நிலையில் மாநாடு நடந்த சந்தர்ப்பத்தில் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். இந்தக் கூட்டம் மக்ரிப் மற்றும் இஷா தொழுகைக்குப் பிறகு மஸ்ஜிது முபாரக்கில் வைத்து நடந்தது. இந்த எளியவன் அனுபவமில்லாத காரணத்தாலும் அப்பாவித்தனத்தாலும் அல்லது ஆர்வத்தின் காரணமாக கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவே கூட்டம் நடைபெறக்கூடிய அருளுக்குரிய இடமான மஸ்ஜிது முபாரக்கிற்கு வந்து சேர்ந்தேன். அது சாப்பாட்டு நேரமாக இருந்தது. எனக்கு கடுமையான பசியும் இருந்தது. ஏனென்றால் நான் காலை 8.00 மணிக்கு சாப்பிட்ட சாப்பாடுதான். அதற்கு பிறகு ஒன்றும் சாப்பிடவில்லை. மாநாட்டின் கண்ணியத்தை கருத்தில் கொண்டவாறு அல்லது நேரம் தவறாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த எளியவன் ஆரம்ப நேரத்திலேயே கூட்டத்திற்கு சென்று விட்டேன். மக்ரிப், இஷா தொழுகை ஒன்றாக சேர்த்து தொழப்பட்ட பிறகு வெளியில் செல்வதற்குப் பதிலாக நான் பள்ளிவாசலிலேயே உட்கார்ந்து விட்டேன். கூட்டத்திற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரம் கழிந்த பிறகு உறுப்பினர்கள் வர ஆரம்பித்தனர். ஏறக்குறைய 9.30 மணிக்கு கூட்ட நிகழ்வுகள் ஆரம்பித்தது. ஏறக்குறைய 11.00 அல்லது 12 மணிக்கு கூட்டம் முடிந்தது. இந்த சமயங்களில் வெளியே செல்ல முடியாத அளவுக்கு கடுமையான பசி இருந்தது. இந்த கடுமை வெகு காலம் வரை எனது நினைவில் இருந்தது. இதுவரை நான் அதை மறக்கவில்லை. கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு மீண்டும் நான் தங்கியிருந்த இடத்திற்கு திரும்பி வந்ததும் பட்டியாலா ஜமாஅத்தைச் சேர்ந்த சகோரர்களில் ஒருவரான ஹாபிஸ் மலிக் முஹம்மது சாஹிப் அவர்கள் எனக்காக ரொட்டியின் ஒரு துண்டை கொண்டு வந்தார்கள். அப்போது லங்கர் கானா மூடியிருந்தது. நான் இந்த ரொட்டித் துண்டை சவைக்க ஆரம்பித்தேன். அதை நான் சாப்பிட்டு முடிப்பதற்குள் யாரோ பலமாக கதவை தட்டும் சத்தம் கேட்டது. பிறகு ஏதாவது விருந்தாளி சாப்பிடாமல் பசியுடன் இருந்தால் அவர் சாப்பிட வரவும் என்று அழைப்புக் குரல் வந்தது. மேலும் லங்கர் கானாவுக்கு வந்து அவர் சாப்பிடலாம் என்று கூறப்பட்டது. எனது நண்பர்கள் என்னை அறையிலிருந்து வெளியே கொண்டு வந்தனர். லங்கருக்கு சென்று கிடைத்ததை இறைவனுக்கு நன்றி செலுத்தியவாறு சாப்பிட்டேன். அடுத்த நாள் காலை ஏறக்குறைய 10.00 மணிக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நான் மஸ்ஜிது முபாரக்கின் சிறிய மாடிப்படிகளின் கதவருகில் நிற்பதைப் பார்த்தேன். அன்னாருடன் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களும் இருந்தார்கள். அப்போது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: விருந்தினர்களுக்கு நல்ல முறையில் உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இரவில் எனக்கு, **யா அய்யுஹன்னபிய்யு அத்குமுல் ஜாய வல் முஃதர் – நபியே! பசித்து இருப்பவர்களுக்கும் நிம்மதி இழந்தவர்களுக்கும் உணவளிப்பாயாக!** என்று இல்ஹாம் வந்தது. பாதி இரவு கழிந்த பிறகு எங்களை இந்த இல்ஹாமின் அடிப்படையில் தான் தட்டி எழுப்பியுள்ளார்கள் என்பது எனக்கு தெரிய வந்தது.

**சதருத்தீன் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் மவ்லவி இப்ராஹீம் சாஹிப் பகாபூரி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு ஆண்டு மாநாட்டின் போது ஹுஸூர் அவர்கள், வருகின்ற அனைவருக்கும் ஒரே விதமான உணவைப் பரிமாறுங்கள் என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களோ அல்லது வேறு யாரோ தங்களது வீடுகளில் பருப்பு கூட சாப்பிட முடியாத பல ஏழைகளும் இங்கு வருகின்றார்கள். எனவே அவர்களுக்கு பருப்பு சாப்பிடக் கொடுப்பது ஒரு குறை ஆகாது என்று கூறினார். இதைக் கேட்ட ஹுஸூர் (அலை) அவர்கள, அவர்களுக்கு வீட்டில் பருப்பு கிடைக்காமல் இருந்தாலும் மற்றவர்கள் இறைச்சி, நெய்சோறு ஆகியவற்றை சாப்பிடுவதை அவர்கள் பார்க்கும் போது அவர்களுக்கு சாப்பிடுவதற்கான விருப்பம் மேலும் அதிகமாக இருக்கும். அது கிடைக்காத நிலையில் அவர்களது உள்ளம் உடைந்து விடும். எனது சீடர்கள் ஏழையாக இருந்தாலும் பணக்காரராக இருந்தாலும் அவர்களுடன் எனக்கு ஒரே விதமான தொடர்புதான் இருக்கின்றது. எனவே, ஒரே விதமான உணவை சமைக்க வேண்டும். இறைச்சி, நெய்சோறு ஆகியவற்றை வழங்குவதாக இருந்தால் எல்லாருக்கும் அதையே வழங்க வேண்டும். பருப்பு கொடுப்பதாக இருந்தால் எல்லாருக்கும் அதே பருப்பு தான் வழங்க வேண்டும் என்று கூறினார்கள்.

இதே வழிமுறையை நாமும் எப்போதும் கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும்.

**முஃப்தி சஹாபுத்தீன் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் முஃப்தி சிராகுத்தீன் சாஹிப் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்கு கபூர்தலா ஜமாஅத்துடன் குறிப்பான அன்பு இருந்தது. இந்த ஜமாஅத்திற்கு என்று ஹுஸூர் அவர்கள் தனியாக நெய்சோறு தயார் செய்தார்கள். உணவு தயாரானதும் ஹுஸூர் ஒருவரிடம் கபூர்தலா ஜமாஅத்திற்கு இந்த உணவை வழங்குங்கள் என்று கூறினார்கள். அந்த நபர், ஹுஸூர் அவர்களே! அவர்கள் அனைவரும் சென்று விட்டார்கள் எனக் கூறினார். இதைக் கேட்டதும் குதிரை வண்டியில் இந்த உணவை பட்டாலாவுக்கு கொண்டு செல்லுங்கள். அவர்கள் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும் ஹுஸூர் அவர்களிடமிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்ட உணவு முதலிலேயே அங்கு வைக்கப்பட்டிருந்தது. ஹுஸூர் அனுப்பி வைத்த நபர் உணவை சாப்பிடுங்கள் என்று கூறினார். இந்த உணவு எங்கிருந்து வந்தது என்று நாங்கள் வியப்படைந்தோம். அந்த நபர் அப்போது நடந்த எல்லாவற்றையும் கூறினார்.

**ஹஸ்ரத் மியான் அப்துல் அஸீஹ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஹுஸூர் (அலை) அவ்களின் காலத்தில் ஆண்டு மாநாடு காலையில் நடைபெறும். இன்று மத்ரஸா அஹ்மதிய்யாவிற்கும் மவ்லவி குத்புத்தீன் சாஹிப் அவர்களின் பாடசாலைக்கும் மத்தியிலுள்ள இடத்தில்தான் அன்று ஒரு பிளாட்பார்ம் அமைக்கப்பட்டு அங்கு மாநாடு நடைபெற்று வந்தது. ஹஸ்ரத் சாஹிபின் காலத்தில் மாநாட்டு நாட்களில் நாங்கள் பொதுவாக நெய்சோறு, இனிப்புச்சோறு ஆகியவற்றையே சாப்பிட்டு வந்தோம். எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. ஒருமுறை கடுமையான பஞ்சம் நிலவியது. ஒரு ரூபாய்க்கு 5 கிலோ கோதுமை மாவே கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு லங்கருக்கான செலவீனங்கள் தொடர்பான கவலை ஏற்பட்டது. அப்போது மீண்டும் அவர்களுக்கு அலைஸல்லாஹு பி காஃபின் அப்தஹு - அல்லாஹ் தன் அடியானுக்குப் போதுமானவன் அல்லவா என்ற இல்ஹாம் வந்தது. இதற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்றிலிருந்து லங்கருக்கான செலவுகளை இரு மடங்கு அதிகமாக ஆக்கி விடுங்கள் என்று கூறினார்கள. அப்போது மிகச் சிறப்பான முறையில் குழம்புகள் தயார் செய்யப்பட்டன. இன்று வரை இந்த அருள் நீடித்துக் கொண்டிருக்கிறது.

**ஹஸ்ரத் பாபு குலாம் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

குர்தாஸ்பூரில் வழக்கு நடந்து கொண்டிருந்த சமயத்தில் ஓர் இரவில் நாங்கள் இரயிலிலிருந்து இறங்கினோம். அப்போது கடுமையான காற்று வீசத் தொடங்கியது. அது குளிர் காலமாக இருந்தது. ஹுஸுர் (அலை) அவர்கள் நாங்கள் தங்கியிருந்த அறைக்கு வந்ததும் எல்லாரும் சோர்வாக இருக்கின்றீர்கள். எனவே, எல்லாரும் தூங்குங்கள் என்று கூறினார்கள். நாங்கள் எல்லாரும் எங்கள் படுக்கைகளை எடுத்துக் கொண்டு படுத்து விட்டோம். கொஞ்ச நேரம் கழிந்ததும் ஹுஸுர் தமது படுக்கையிலிருந்து எழுந்தார்கள். கையில் சிறிய விளக்கை ஏந்தியவாறு மெதுவாக நடந்து ஒவ்வொருவரது படுக்கையையும் அன்னார் தடவிப் பார்த்தார்கள். எவரிடமாவது போதுமான அளவு படுக்கை, போர்வை இல்லாமல் இருக்கின்றதா என்பதை அவர்கள் பார்த்தார்கள். எவரிடமாவது அவரது படுக்கையில் ஏதாவது குறைவாக இருப்பதைப் பார்த்தால் ஹுஸுர் அவர்கள் உடனடியாக தமது படுக்கையிலிருந்து ஒரு துணியைக் கொண்டு வந்து அதன் மீது போட்டார்கள். அப்படிப்பட்ட குளிரான நேரத்தில் ஒரு தாய் தனது குழந்தைகளை பாதுகாப்பது போல் ஹஸ்ரத் சாஹிபும் செயல்பட்டார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள் தமது படுக்கையில் இருந்தும் 5 அல்லது 6 துணிகளை எடுத்து விருந்தினர்கள் மீது அதனை போர்த்தினார்கள். நான் விழித்திருந்த நிலையில் ஹுஸுர் அவர்களின் இந்த அன்பையும் பரிவையும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

**மியான் கரீம் பக்ஸ் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் மலிக் குலாம் ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஆண்டு மாநாட்டு சமயத்தில் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஜெஹ்லமி அவர்கள் வந்து என்னை சந்தித்தார்கள். அப்போது ஹஸ்ரத் சாஹிப் என்னை அழைத்து மியான் குலாம் ஹுஸைனே! இந்த மவ்லவி சாஹிப் உங்களுடைய ஆளாக இருக்கின்றார். உங்களுக்கு பொருத்தமாகத் தெரிகின்ற இடத்தில் இவரை தங்க வையுங்கள் என்று கூறினார்கள். அதற்கு நான், ஹுஸுர்! இவர் என்னுடன்தான் இருப்பார் என்று நான் கூறினேன். இதைக் கேட்டு மவ்லவி சாஹிப் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இவர் முதியவர். எனவே குறிப்பாக இவரை கவனித்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் சாஹிப் என்னிடம் கூறினார்கள். மேலும் உள்ளேயிருந்து குழம்பை அதிகமாக கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். இவருக்கு அதிகமாக குழம்பு கொடுங்கள். அதனால் இவருக்கு எந்த துன்பதும் ஏற்படக்கூடாது என்று கூறினார்கள்.

**சவுத்ரி அஹ்மது தீன் சாஹிப் அவர்களின் மகன் சவுத்ரி அப்துல் அஸீஸ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் இங்கு, லாஹுர் கல்லூரியில் படிப்பை நிறைவு செய்வதற்காகச் சென்றிருந்தேன். அங்கிருந்து நானும் மியான் முஹம்மது ரமஸான் சாஹிப் அவர்களும் ஹுஸுர் அவர்களைப் பார்ப்பதற்காக காதியான் சென்றோம். அங்கு நாங்கள் ஓர் இரவு தங்கியிருந்தோம். நாங்கள் திரும்பி வந்த போது ஹுஸுர் அவர்கள், கொஞ்சம் தங்கி இருங்கள் என்று கூறினார்கள். பிறகு நாங்கள் சாப்பிட்ட பிறகு மதிய வேளையில் திரும்பிச் செல்வதற்காக ஹுஸுர் அவர்களிடம் அனுமதி கேட்ட போது ஹுஸுர் அவர்கள் இங்கு அதிகமாக வாருங்கள் என்று கூறினார்கள். அன்னாரது கைகளிலும் நான் பைஅத் செய்தேன். ஆனால் என்னுடன் வந்த எனது நண்பர் பைஅத் செய்யவில்லை. நாங்கள் திரும்பி வந்த போது ஹுஸுர் அவர்கள் ஒரு பரோட்டாவையும் குழம்பையும் ஒரு கைக்குட்டையில் வைத்துக் கட்டி தங்களது கைகளால் அதனை எங்களுக்கு வழங்கினார்கள்.

**சவுத்ரி இலாஹி பக்ஸ் சாஹிப் அவர்களின் மகன் சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிப் இவ்வாறு எழுதுகின்றார்:**

ஒருமுறை செப்டம்பர் மாதத்தில் சவுத்ரி நஸருல்லாஹ் கான் சாஹிப் அவர்களும் நானும் ளுஹர் சமயத்தில் காதியான் வந்து சேர்ந்தோம். உளூ செய்து ஜமாஅத்தாக நடைபெற்ற தொழுகையில் கலந்து

கொண்டோம். தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் சாஹிப் மிஹ்ராபில் அமர்ந்து இருந்தார்கள். சவுத்ரி சாஹிப் அவர்களைப் பார்த்து, சவுத்ரி சாஹிப்! இப்போதுதான் நீங்கள் வந்துள்ளீர்கள். உணவு அருந்துங்கள் என்று ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள். சவுத்ரி சாஹிப் புன்னகை பூத்தவாறு ஹுஸூர்! இது சாப்பிடுவதற்கான நேரமா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் சாஹிப் புன்சிரிப்புடன் சவுத்ரி சாஹிப்! சாப்பிடுவதற்கென்று ஒரு நேரம் இருக்க முடியுமா? பசிக்கும்போது சாப்பிட வேண்டும் என்று கூறினார்கள். மேலும் தனது ஊழியரை அனுப்பி வைத்து சாப்பாட்டை தயார் செய்து கொண்டு வந்தார்கள். பிறகு நாங்கள் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களின் அறையில் அமர்ந்து சாப்பிட்டோம்.

இதே வருடத்தில் இன்னொரு சம்பவமும் நடந்தது. பெருமழை பெய்தது. இன்றைய நாட்களில் மியான் பஷீர் அஹ்மத் சாஹிப் இருந்து வரும் அந்த வீடு விருந்தினர் விடுதியாக இருந்தது. இது மஸ்ஜிது அக்ஸாவிற்கு அருகிலுள்ள வீடாகும். நாங்கள் அங்கு தங்கியிருந்தோம். அப்போது மியான் நஜ்முத்தீன் சாஹிப் அவர்கள் லங்கர் கானாவின் பொறுப்பாளராக இருந்து வந்தார். மக்கள் ஹுஸூர் (அலை) அவர்களை குரல் எழுப்பி அழைத்தவாறு ஹுஸூர்! ஒரு பட்டான் இங்கு வந்துள்ளார். அவர் இறைச்சி இல்லாமல் சாப்பிடமாட்டார் என்று கூறினார்கள். இவருக்கு இறைச்சி சமைத்துக் கொடுங்கள் என்று ஹுஸூர் கூறினார்கள். மியான் நஜ்முத்தீன் சாஹிப் அவர்கள் ஹுஸூர்! பெருமழையின் காரணமாக கசாப்புக்கடைக்காரர்கள் ஆடு எதையும் அறுக்கவில்லை என்று கூறினார். இதைக் கேட்ட ஹுஸூர் அவர்கள் அப்படியா? இவருக்கு கோழிக்கறி சமைத்துக் கொடுங்கள் என்று கூறினார்கள். இன்னொரு நாள் இதே நபர் மீண்டும் வந்தார். அப்போது மக்கள் ஹுஸூர்! ஒரு பட்டான் நான் சிச்சடி சாப்பிட வேண்டும் என்று கூறுகிறார் என்றனர். இவருக்கு சிச்சடி சமைத்துக் கொடுங்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்.

பொதுவான நேரங்களில் வரும் விருந்தாளிகளின் விருப்பத்திற்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கண்ணியம் அளித்தார்கள்.

**சவுத்ரி அப்துர் ரஹீம் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் எனக்கு 500 ரூபாய் தந்தார்கள். மேலும் என்னிடம் ஆண்டு மாநாட்டிற்கான ஏற்பாடுகள் செய்வதை நான் உங்களிடம் ஒப்படைக்கின்றேன். ஆனால் எல்லா சகோதரர்களுக்கும் ஒரே விதமான உணவுதான் தயார் செய்யப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

பொதுவான நாட்களில் வரும் விருந்தினர்களுக்கு அவரவரது விருப்பத்திற்கேற்ப உணவு சமைக்கப்பட்டது. ஆனால் ஆண்ட மாநாட்டைப் பொருத்தவரையில் எல்லாருக்கும் ஒரே விதமான உணவுதான் தயார் செய்யப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்கள். இது தொடர்பாக இதற்கு முன்னரும் ஒரு அறிவிப்பை நான் கூறி விட்டேன்.

சிலர் மவ்லவி ஹகீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப் இவ்விஷயத்தில் அதிக அனுபவம் உள்ளவர் என்று கூறினார்கள். ஆனால் ஹுஸூர் அதற்கு எந்த பதிலும் கூறவில்லை. இதற்குப் பிறகு காஜா கமாலுத்தீன் சாஹிப்அவர்கள் என்னிடம் வந்து எனக்காக சோறு தயார் செய்யுங்கள் என்று கூறினார். நான் அவரிடம் எல்லாருக்கும் ஒரே விதமான உணவு தயார் செய்யப்பட வேண்டும் என்பதே ஹஸ்ரத் சாஹிப் எனக்கு கட்டளை இட்டுள்ளார்கள். எனவே நீங்கள் சோறு சாப்பிட விரும்பினால் அதற்காக ஹஸ்ரத் சாஹிபிடம் அனுமதி கேளுங்கள் என்று கூறினேன். சோறு வேண்டும் என்பதற்காக நான் ஏன் அனுமதியைக் கேட்க வேண்டும் என காஜா சாஹிப் என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஹுஸூர் அவர்களின் அனுமதி இல்லாமல் ஒரு பருக்கை சோறு கூட உங்களுக்கு தரமாட்டேன் என்று கூறிவிட்டேன். இதைக் கேட்ட அவர் என் மீது வெறுப்படைந்தார். இங்கு அவர் இருந்த நாட்கள் வரை என் மீது வெறுப்படைந்தவராகவே அவர் இருந்தார்.

**மியான் அப்துல் அஸீஸ் சாஹிப் முகல் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

இன்றைய நாட்களில் மியான் பஷீர் அஹ்மத் சாஹிப் இருந்து வரும் அந்த வீட்டில் தான் விருந்தினர் விடுதி முதலில் இருந்து வந்தது. காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் லங்கரிலிருந்தும் ஒரு ஆட்டின் இறைச்சியை எடுத்து அத்துடன் 3 லிட்டர் நெய், கொஞ்சம் கிழங்கு வகை ஆகியவற்றைச் சேர்த்து இரவு நேரத்தில் ஒரு அண்டாவில் இவற்றை வைத்து சமைக்க ஆரம்பித்தார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரவு 11.30 மணிக்கு தற்செயலாக விருந்தினர்களைப் பார்ப்பதற்காக வந்தார்கள். அண்டாவைப் பார்த்ததும் இது என்ன? என்று கேட்டார்கள். ஒரு நபர் இது இரவு நேரத்து அண்டாவாகும் என்று கூறினார். இரவு நேரத்து அண்டா என்றால் என்ன? என்று ஹஸ்ரத் சாஹிப் கேட்டார்கள். அதற்கு கொஞ்சம் இறைச்சியும், நெய்யும், கிழங்கு வகையும் முழு இரவும் சமைக்கப்படும் என்று கூறப்பட்டது. இதைக் கேட்ட ஹுஸூர் அவர்கள் லங்கரிலிருந்தும் தனியாகப் பிரிந்து சமைப்பது எனக்கு விருப்பமற்ற செயலாகும் என்று கூறினார்கள். லங்கரில் ஓர் உணவு சமைக்கப்படும் போது அதை தவிர தனியாக வேறு சமையல் நடந்ததை அவர்கள் விரும்பவில்லை. இதற்குப் பிறகு ஹுஸூர் அங்கிருந்து சென்று விட்டார்கள்.

பிறகு எல்லாரும் தூங்கிய பிறகு அண்டாவின் கீழ் வைக்கப்பட்ட நெருப்பும் தணிந்து குளிர்ந்து விட்டது. அதற்கு பிறகு 10 அல்லது 12 நாய்கள் அங்கிருந்து வந்து அந்த அண்டாவை கவிழ்த்து அதிலிருந்து இறைச்சியை சாப்பிட ஆரம்பித்தன. இந்த நாய்கள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டதைக் கேட்டு இவர்களின் தூக்க கலைந்தது. அவர்கள் நாய்களை அங்கிருந்து அப்புறப்படுத்திய பிறகு அண்டாவில் மிகக் குறைவாகவே குழம்பு இருப்பதைப் பார்த்தார்கள். பிறகு ஹஸ்ரத் சாஹிபிடம் சென்று ஹுஸூர் இந்தக் குழம்பை தெருக்களைப் பெருக்குகின்றவர்களுக்கு கொடுத்து விடுகிறோம் என்று கூறினர். இதைக் கேட்ட ஹுஸூர், நாய்கள் சாப்பிட்டு விட்டு மிஞ்சிய உணவாகும் என்பதை முதலில் அவர்களுக்கு தெரிவித்து விடுங்கள். பிறகு அவர்களது உள்ளம் விரும்பினால் அதை எடுத்துக் கொண்டு அவர்கள் செல்லட்டும் அல்லது எடுத்துச் செல்லாமல் இருந்தால் அவ்வாறே இருக்கட்டும் என்று கூறினார்கள். அவர் தெரு பெருக்குகிறவர்களிடம் சென்று இதை கூறிய போது அவர்கள் தவ்பா தவ்பா நாய்கள் சாப்பிட்டு விட்டு எஞ்சியுள்ள உணவை நாங்கள் ஏன் சாப்பிட வேண்டும்? என்று கூறிவிட்டனர். அண்டாவில் இருந்த குழம்பு எல்லாம் வெளியில் கொட்டப்பட்டது. மிகவும் ஆர்வத்துடன் லங்கரிலிருந்தும் தனியாக பிரிந்து தனக்காக உணவு சமைத்த காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களின் நாவிலிருந்தும் அவரது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில், மிர்ஸாஜியின் கண் பட்டு விட்டது என்ற சொற்கள் வெளிவந்தன. அந்த அப்பாவிக்கு சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்கவில்லை.

**ஹஸ்ரத் மலிக் குலாம் ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் ஷஹீது அவர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வந்திருந்தார்கள். ஹுஸூர் அவர்களை சந்திக்க விரும்பினார்கள். ஒரு நபர் அவரிடம் மியான் குலாம் ஹுஸைன் சாஹிப் அவர்கள் தான் ஹுஸூரை சந்திப்பதற்கான ஏற்பாட்டை செய்வார்கள். எனவே அவரிடம் இதைப் பற்றி கூறுங்கள் என்று கூறினார். அவர் என்னை சந்தித்து நான் ஹஸ்ரத் சாஹிப் அவர்களை சந்திக்க வேண்டும் என்று கூறினார். நான் அவருக்கு உணவு பரிமாறினேன். சாப்பிட்ட பிறகு மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் நான் ஹுஸூரை சந்திக்க வேண்டும். இதுபற்றி ஹுஸூர் அவர்களுக்கு தகவல் தெரிவியுங்கள் என்று கூறினார். நான் பகல் ஒரு மணிக்கு உள்ளே சென்று கதவைத் தட்டினேன். ஒரு சிறுவன் ஜன்னலைத் திறந்து பார்த்தார். நான் ஹஸ்ரத் ஜீ என்றேன். என்ன என்று ஹஸ்ரத் சாஹிப் கேட்டார்கள். ஒரு நபர் காபூலிலிருந்து வந்துள்ளார். அவரது பெயர் மவ்லவி அப்துர்ரஹ்மான் ஆகும். அவர்கள் உங்களை சந்திக்க விரும்புகின்றார்கள் என்று நான் கூறினேன். இப்போது பாங்கு கொடுக்கப்படும். பள்ளிவாசலில் சந்திப்போம் என்று ஹுஸூர் கூறினார்கள். ஹுஸூர்! அவர்கள் உங்களை தனிமையில் சந்திக்க விரும்புகின்றார் என்று நான் கூறினேன். ஹுஸூர் உள்ளே சென்றார்கள். கொஞ்ச நேரம் கழிந்த பிறகு திரும்பி வந்து என்னிடம் அவரை இங்கு அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். நான் அவர்களை உள்ளே அழைத்து சென்றேன்.

அவர் பயந்தவாறு உள்ளே வந்தார்கள். அவரிடத்தில் பாதாம், மற்றும் பல பழங்கள் இருந்தன. இந்தப் பொருட்களை அவர் ஹஸ்ரத் சாஹிபிடம் வழங்கினார்கள். ஹுஸுர், மவ்லவி சாஹிபிடம் இந்த அளவு நீங்கள் ஏன் சிரமப்பட்டீர்கள்? என்று கேட்டார்கள். உங்களுக்கு வெகு தூரம் வரை இந்தப் பொருள்களை சுமக்க வேண்டியது இருந்திருக்கும் என்றும் கூறினார்கள். ஹுஸுர்! நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இங்கு வந்துள்ளேன். இரயில் வண்டியில் மிகக் குறைவாகவே நான் பயணம் செய்து வந்தேன். அதிக தூரங்கள் நடந்தே வந்துள்ளேன் என்று அவர் கூறினார். ஹுஸுர் அவரிடம் மவ்லவி சாஹிப் நீங்கள் தேனீர் குடிப்பீர்களா? அல்லது சர்பத் குடிப்பீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஹுஸுர்! நான் இப்போது சாப்பிட்டு விட்டேன். உங்களுக்கு எந்த சிரமமும் வேண்டாம் என்றார். ஹஸ்ரத் சாஹிப் என்னிடம் மியான் குலாம் ஹுஸைன்! இவருக்கு குடிக்க சர்பத் கொடுங்கள் என்று கூறினார்கள். நான் உள்ளே சென்றேன். உம்முல் மூஃமினீன் அவர்கள் குளிர்ந்த தண்ணீர் இல்லை. பெரிய பள்ளிவாசலில் (மஸ்ஜிது அக்ஸா) இருந்து தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். நான் பெரிய பள்ளிவாசலிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தேன். ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் அவர்கள் சர்பத் தயார் செய்தார்கள். நான் சர்பத்தை அவருக்கு குடிக்கக் கொடுத்தேன். அவர் குடித்தார். ஹுஸுர் இன்னும் குடியுங்கள் என்று அவரிடம் கூறினார்கள். பிறகு ஒரு டம்ளர் அவர் குடித்தார். சர்பத் மீதியிருந்தது. நான் ஹஸ்ரத் சாஹிபிடம் நீங்கள் குடியுங்கள் என்றேன். வேண்டாம்; இதைக் கொண்டு செல்லுங்கள் என்று கூறி விட்டு இவர் மிகவும் தொலைவிலிருந்து வந்துள்ளார். இவருக்காக தனியாக உணவு தயார் செய்யவும். நல்ல உணவை அவருக்கு கொடுங்கள் என்று ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள். அவர் இரண்டு மாதங்கள் வரை இங்கு தங்கியிருந்தார். என்னுடன் மிக்க மகிழ்ச்சியுடன் இருந்து வந்தார். ஹஸ்ரத் சாஹிப் இவருக்காக ஒருவேளை நெய்சோறு சமைத்துக் கொடுங்கள் என்று எனக்கு குறிப்பாக கட்டளையிட்டிருந்தார்கள்.

**குஜ்ரான்வாலாவைச் சேர்ந்த ஹஸ்ரத் பாபு அப்துல் அனீஸ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் ஒரே ஒருமுறை மட்டும் இரண்டு நாட்கள் காதியானில் வந்து இருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அப்போது நான் மாணவனாக இருந்தேன். ஒரு மாணவர் என்னோடு வந்திருந்தார். இதற்கு முன்னர் நான் எழுத்து மூலம் பைஅத் செய்திருந்தேன். ஹஸ்ரத் சாஹிபின் கைகளில் பைஅத் செய்ய இப்போது வந்தேன். பைஅத் செய்த பிறகு மாலை நாங்கள் இருவரும் திரும்பி வர முற்பட்டபோது ஹுஸுர் அவர்கள் இன்று இரவும் இங்கு தங்கிவிட்டுச் செல்லுங்கள் என்று எங்களிடம் கூறினார்கள். இரவில் எங்களுக்கான படுக்கையை அவர்கள் தங்கள் கைகளில் எடுத்து வந்தார்கள். எங்களை தங்களுடன் அமர வைத்து அங்கேயே உணவு பரிமாறினார்கள். அடுத்த நாள் காலையில் இரண்டு பரோட்டாக்களை கைக்குட்டையில் வைத்து கட்டி அதனை எங்களுக்கு வழங்கினார்கள். தெருவில் எங்களுடன் சிறிது தூரம் வரை நடந்து வந்து மீண்டும் திரும்பிச் சென்றார்கள். ஹுஸுர், கரம்தீன் தொடர்பான வழக்கிற்காக ஜெஹ்லம் சென்ற நாட்களில் நடந்த சம்பவமாகும். ஹுஸுர் தந்த பரோட்டாக்களை நான் வீட்டில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தேன். அதன் விளைவாக சிறிது காலம் கழிந்ததும் எனது சகோதரரும் தாயாரும் அஹ்மதி ஆகிவிட்டார்கள். அந்த உணவிலிருந்து இந்த பரக்கத் கிடைத்தது என்று அவர் கூறுகின்றார்.

**ஹஸ்ரத் முன்ஸி ஸபர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் அமர்ந்திருக்கும் இடம் திறந்து காணப்பட்டது. மாறாக கதவு உள்ளே பூட்டப்பட்டிருக்கும் நிலையில் தான் அவர்கள் அமர்ந்திருப்பார்கள். ஹஸ்ரத் மியான் மஹ்மூது அஹ்மத் சாஹிப் சிறிது நேரம் கழிந்ததும் அங்கு வந்து அப்பா! தாழ்ப்பாழை திறங்கள் என்று கூறியதும் ஹுஸுர் எழுந்து கதவைத் திறந்து விடுவார்கள். ஒரு நாள் நான் அவர்களை சந்திக்க சென்ற சமயத்தில் ஹுஸுர் ஒரு கோணிப்பையின் மீது அமர்ந்திருந்தார்கள். என்னைப் பார்த்ததும் அவர்கள் ஒரு கட்டிலை உள்ளே எடுத்துச் சென்றார்கள். அதை நான் தூக்குகின்றேன் என்று நான் அவர்களிடம் கூறினேன். அதற்கு ஹுஸுர் இதன் சுமை அதிகமாகும். இதை உங்களால் தூக்க முடியாது என்று கூறினார்கள். பிறகு நீங்கள் கட்டிலில்

அமருங்கள். எனக்கு இங்கே கீழே அமர்வது தான் சுகமாக இருக்கின்றது என்று கூறினார்கள். முதலில் நான் உட்கார மறுத்தேன். ஹஸ்ரத் சாஹிப் செயற்கையாக எதையும் செய்யாமல் நீங்கள் இந்த கட்டிலில் அமருங்கள் என்று கூறினார்கள். நான் அமர்ந்தேன். எனக்கு தாகம் ஏற்பட்டது. நான் குடங்களின் பக்கம் பார்த்தேன். அங்கு தண்ணீர் குடிப்பதற்கான எந்தப் பாத்திரமும் இருக்கவில்லை. ஹுஸுர் அவர்கள் என்னைப் பார்த்து உங்களுக்கு தாகமாக இருக்கிறதா என்று கேட்டார்கள். கீழே பெண்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று அவர்கள் டம்ளர் கொண்டு வந்தார்கள். பிறகு மீண்டும் கீழே சென்று சர்பத்தின் இரண்டு பாட்டில்களைக் கொண்டு வந்தார்கள். அது யாரோ ஒருவர் மணிப்பூரிலிருந்து அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகும். அந்த சர்பத் மிகவும் சுவையாக இருந்தது. பிறகு ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள்:

இந்த பாட்டில்களை நாம் பல நாட்களாக நம்மிடம் வைத்திருந்தோம். முதலில் நமது நண்பர் ஒருவருக்கு இதை குடிக்கக் கொடுத்து விட்டு நாம் இதை குடிக்க வேண்டும் என்று நாங்கள் நிய்யத் வைத்திருந்தோம். இப்போது அது இன்று எனக்கு நினைவில் வந்தது என்று கூறினார்கள்.

பிறகு அவர்களே சர்பத் தயார் செய்து அதை எனக்கு தந்தார்கள். ஹுஸுர் முதலில் தாங்கள் இதிலிருந்தும் கொஞ்சம் குடியுங்கள். அதற்கு பிறகு நான் குடிப்பேன் என்று நான் கூறினேன். அவர்கள் ஒரு முடக்கு குடித்து விட்டு அதனை எனக்கு தந்தார்கள். நான் அதை குடித்தேன். பிறகு சர்பத்தை புகழ்ந்து கூறினேன். இதைக் கேட்ட ஹுஸுர் அவர்கள் ஒரு பாட்டிலை நீங்கள் கொண்டு செல்லுங்கள். இன்னொரு பாட்டிலை வெளியில் இருக்கும் நண்பர்களுக்கு குடிக்கக் கொடுங்கள் என்று கூறினார்கள். இந்த இரண்டு பாட்டில்களிலிருந்தும் அவர்கள் ஒரு முடக்கு தான் குடித்தார்கள். நான் அவர்களின் கட்டளைக்கேற்ப போத்தல்களை எடுத்துக் கொண்டு வந்தேன்.

**ஹஸ்ரத் மியான் கைருத்தீன் சாஹிப் ஷேக்வானி அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை நான் ஹுஸுர் அவர்களிடம் சென்றேன். அப்போது பள்ளிவாசலில் வக்கீல் முஹக்கமுத்தீன் சாஹிப் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். வக்கீல் சாஹிப் என்னிடம், நீங்கள் தபர்ருக் சாப்பிட விரும்புகின்றீர்களா? என்று கேட்டார்கள். நான் ஆம், என்று பதில் கூறினேன். வக்கீல் சாஹிப் அவர்கள் அப்போது ஹுஸுர் அவர்களுக்கு அதுபற்றி தகவல் தெரிவித்தார்கள். ஹுஸுர் அவர்கள் ஒரு தட்டில் சோறு வைத்து அதன் மீது ஆட்டுக்கறி குழம்பும் ஊற்றி இருந்தார்கள். அதில் ஒருபுறம் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு ஒரு பெண் ஊழியர் மூலம் அதனை எங்களுக்கு அனுப்பித் தந்தார்கள். அதனை நாங்கள் இருவரும் சேர்ந்து சாப்பிட்டோம்.

**மாஸ்டர் நதீர் கான் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

எனது மாமா ஸாமத்கான் சாஹிப் அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஒருமுறை காதியான் சென்ற சமயத்தில் எனது அஹ்மதி நண்பரான கமாலுத்தீன் அவர்களையும் காதியான் அழைத்துச் சென்றேன். மிர்ஸா குதா பக்ஸ் சாஹிப் அவர்களை எங்களுக்கான உணவு ஏற்பாட்டை செய்வதற்காக ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் நியமித்திருந்தார்கள். இவர்கள் மலைவாழ் மக்களாவர். சோறு சாப்பிடும் பழக்கமுள்ளவர்கள். இவர்களுக்காக கண்டிப்பாக சோறு தயார் செய்யப்பட வேண்டும் என்று ஹஸ்ரத் சாஹிப் அவருக்கு கட்டளையிட்டார்கள்.

பாகிஸ்தானில் ரப்வாவில் ஜல்ஸா நடைபெறும் போது எல்லைப்புற பகுதிகளிலிருந்து வரும் மக்களுக்கு தனியாக ரொட்டி சுடப்படும். பொதுவாக சுடப்படும் ரொட்டிகளை அவர்கள் சாப்பிடுவதில்லை. சில நேரங்களில் பத்திய உணவுகள் தனியாக சமைக்கப்பட்டன. நோயாளிகளுககும், சில குறிப்பான உணவுகளை மட்டுமே சாப்பிடும் பழக்கமுடையவர்களுக்கும் அவர்களால் வேறு உணவு வகைகளை சாப்பிட முடியாததால் அவர்களுக்கென்று தனியாக உணவு சமைக்கப்பட்டு அவர்களுக்கு தரப்பட்டது. ஆனால் பொதுவாக ஒரே வகையான உணவுதான் தயார் செய்யப்படுகிறது. எல்லா இடங்களிலும் இதுவே நடைமுறைப்படுத்தப்பட்டு

வருகிறது. எவ்வாறிருப்பினும் இம்முறை ஜல்ஸா ஏற்பாட்டின் போது இவர்கள் வி.ஐ.பி சம்பந்தமாக ஓர் ஆட்சேபனையை வைத்தார்கள். ஆனால் அப்போது உணவு ஒன்றாகத்தான் இருந்தது. அதன் பெயரை மாற்றி ரிசர்வ் செய்யப்பட்டு விட்டது. எவ்வாறிருப்பினும் பொதுவாக ஜல்ஸாவின் போது, ஒரு குறிப்பிட்ட உணவை மட்டும் சாப்பிடுபவர்கள் தவிர, உணவு ஒன்றாகத்தான் சமைக்கப்படுகிறது.

**ஹஸ்ரத் ஷேக் ஜான் முஹம்மது சாஹிப் பயணியர் இன்ஸ்பெக்டர் போலீஸ் எழுதுகின்றார்:**

எனக்கு இப்போது 67 வயதாகிறது. நான் 1903-ல் முதன் முறையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கடிதம் மூலமாக பைஅத் செய்தேன். பிறகு 1904-ல் கரம்தீன் தொடர்பான வழக்கு குர்தாஸ்பூரில் நடந்த சமயத்தில் அங்கு வந்து நேரடியாக ஹஸ்ரத் சாஹிபின் கைகளில் பைஅத் செய்யும் நற்பாக்கியத்தைப் பெற்றேன். எனது தந்தையாரான மர்ஹூம் சவுத்ரி குலாம் அஹ்மது கான் சாஹிப் ஹோஸ்யார்பூரிலிருந்து குர்தாஸ்பூருக்கு வந்திருந்தார்கள். சவுத்ரி சாஹிப் மர்ஹூம் அபின் சாப்பிட்டு வந்ததன் காரணமாக நாங்கள் தங்குவதற்கு ஒரு தனி கூடாரத்தை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் நாங்கள் மூன்று பேர் தங்கியிருந்தோம். மற்றவர்கள் கீழே இருந்த வீடுகளிலும் சிலர் கூடாரங்களிலும் தங்கியிருந்தார்கள்.

சவுத்ரி குலாம் அஹ்மது கான் சாஹிப் என்னிடம் கூறினார்கள். எனக்கு சமையலறையில் இரண்டு காடை சமைக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. எனக்கு இரண்டு கொண்டு வாருங்கள் என்று கூறினார். சமையலறையில் இதுபற்றி நான் கேட்ட போது அங்குள்ளவர்கள் லாஹூரிலிருந்து விருந்தாளிகள் வந்துள்ளனர். இது அவர்களுக்காக சமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள். சவுத்ரி குலாம் அஹ்மத் கான் சாஹிப் ஒரு செல்வந்தரும் பல்வேறு வகையான உணவுகளை சாப்பிடக் கூடியவராகவும் இருந்தார். எனது தந்தைக்கு அவர் நண்பராவார். எனவே இதை கருத்தில் கொண்டு கண்டிப்பாக இரண்டு காடை எங்களுக்கு தாருங்கள் என்று நான் பிடிவாதமாக அவர்களிடம் வேண்டினேன். இந்த சமயத்தில் மர்ஹூம் ஹாபிஸ் ஹாமிது அலி சாஹிப் அவர்கள் வீட்டின் மேல் தளத்திற்கு வந்து விட்டார்கள். இந்த விஷயத்தை அவரும் கேட்டார். சமையல்காரர், காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களும் இன்னும் பலரும் வந்துள்ளார்கள். அவர்களுக்காகத்தான் இந்த காடையை சமைக்கப்பட்டது என்று கூறினார். நான் நம்பிக்கையிழந்தவனாக எனது கூடாரத்தில் வந்து சேர்ந்தேன். கொஞ்ச நேரம் கழிந்ததும் ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் மர்ஹூம் ஒரு தட்டில் இரண்டு பொறித்த காடையை கொண்டு வந்தார்கள். பிறகு இவ்வாறு கூறினார்கள். நான் இதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினேன். ஹுஸுர், உடனடியாக அவருக்கு காடையை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். நாளை அனைவருக்கும் காடை சமைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். அடுத்த நாள் ஒரு பெரிய அண்டாவில் காடை சமைக்கப்பட்டு அது அனைவருக்கும் வழங்கப்பட்டது.

**நைரோபியிலிருந்தும் சவுத்ரி முஹம்மது ஸரீஃப் சாஹிப் பி.ஏ. அவர்கள் எழுதியுள்ள டாக்டர் சுல்தான் அலி சாஹிபின் அறிவிப்பில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

1901 -ல் நான் காதியான் சென்றேன். மக்ரிப் தொழுகை நேரத்தில் காதியானில் முபாரக் பள்ளிவாசலுக்கு வந்து சேர்ந்தேன். அந்த பள்ளிவாசல் அந்த சமயத்தில் மிகவும் சிறியதாக இருந்தது. மக்ரிப் தொழுகைக்குப் பிறகு எனது நாட்டைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவர் ஹுஸுர் (அலை) அவர்களிடம், இவர் ஆப்பிரிக்காவிலிருந்து வந்துள்ளார். சில வருடங்களுக்கு முன்பு தான் இவர் ஹுஸுர் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளார் என்று கூறினார். ஹுஸுர் (அலை) அவர்கள் என்னிடம் ஆப்பிரிக்காவிலுள்ள ஜமாஅத் சகோதரர்களின் நிலைமைகளைப் பற்றி கேட்டு அறிந்தார்கள். பிறகு கையைத் தூக்கி துஆ செய்தார்கள். எனது நண்பரிடம் இவரது உணவு, படுக்கை ஆகியவை தொடர்பாக நன்றாக கவனித்துக் வாருங்கள் என்று கூறினார்கள். நாங்கள் இரவு விருந்தினர் விடுதியில் தூங்கிக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு நபர் பால் கொண்டு வந்தார். இதனை ஹஸ்ரத் சாஹிப் உங்களுக்காக அனுப்பி வைத்தார்கள் என்று அவர் கூறினார்.

**முன்ஸி இமாமுத்தீன் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஒருமுறை எனது மனைவி காதியான் வந்தார்கள். மவ்லவி ரஹீம் பக்ஸ் சாஹிப் அவர்களின் மனைவியும் உடன் வந்திருந்தார்கள். திரும்பிச் செல்லும் சமயத்தில் எனது மனைவி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டிற்குச் சென்று உள்ளே நுழையும் போது ஹஸ்ரத் சாஹிப் குடும்பத்தாருடன் அமர்ந்து உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்டதும் எனது மனைவி உடனடியாக திரும்ப வந்து விட்டார்கள். ஹஸ்ரத் சாஹிப் வந்திருப்பது யார்? என்று கேட்டார்கள். மவ்லவி ரஹீம் பக்ஸ் சாஹிபின் மனைவி வந்துள்ளார். முன்ஸி இமாமுத்தீன் சாஹிப் அவர்களின் மனைவியும் வந்துள்ளார் என்று அவர்களிடம் கூறப்பட்டது. ஹுஸுர் அவர்கள் அவர்களை உள்ளே அழைத்தார்கள். இந்த நாட்களில் எனது மனைவியின் மடியில் சிறுவர் நிஸார் அஹ்மது இருந்தார். ஹுஸுர் அவர்கள் தனது உணவிலிருந்தும் கொஞ்சம் உணவு ஒரு பாத்திரத்தில் போட்டு எனது மனைவிக்கு கொடுத்தார்கள். இந்த உணவை குழந்தைகளுக்கு கொடுங்கள் என்று என் மனைவிடம் கூறினார்கள். இவ்வாறு பலமுறை நடந்துள்ளது. எப்பொழுதெல்லாம் எனது மனைவி சாப்பாட்டு நேரத்தில் ஹுஸுர் அவர்களிடம் சென்றார்களோ அப்போதெல்லாம் ஹுஸுர் அவர்கள் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பார்கள். இது ஹுஸுர் அவர்களின் பரிவும் கருணையுமாகும். தனது சீடர்களிடம் இந்த அளவு அவர்கள் அன்புடன் நடந்து கொண்டார்கள்.

**முஹம்மது அலி சாஹிபின் மகன் ஹஸ்ரத் ஸமீர் அலி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

நான் சிறு வயதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி செல்வேன். ஒருமுறை எங்கள் முஹல்லாவைச் சார்ந்த பல பெண்களும் ஹுஸுர் அவர்களை சந்திக்க சென்ற சமயத்தில் நானும் அவர்களுடன் சென்றிருந்தேன். அந்த நாட்களில் எனது வலது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் ஹுஸுரிடம் சென்ற போது ஹுஸுர் அவர்கள் மஸ்ஜிது முபாரக்கிற்கு அருகிலுள்ள அறையில் அமர்ந்திருந்தார்கள். நானும் அந்த அறையில் சென்றேன். ஹுஸுர் மிகவும் அன்புடன் என்னை அவர்களுக்கு அருகில் அமர்த்திக் கொண்டார்கள். இதற்குப் பிறகு உம்முல் மூஃமினீன் அவர்கள் கேரட் அல்வாவை எங்களுக்கு கொண்டு வந்தார்கள். முதலில் ஹுஸுர் எனது வாயில் தனது கைகளால் ஒன்றிரண்டு அல்வா துண்டுகளைப் போட்டார்கள். பிறகு உங்கள் வலது கையில் காயம் ஏற்பட்டுள்ளதால் இடது கையால் சாப்பிடுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். பிறகு நான் வயிறு நிரம்ப சாப்பிட்டேன்.

**ஷேக் ஹாபிஸ் ஹாமிது அலி சாஹிப் மற்றும் ஷேக் ஃபதே முஹம்மது சாஹிப் ஆகியோரின் சகோதரரான ஹஸ்ரத் ஷேக் ஜெய்னுல் ஆபிதீன் கூறுகின்றார்கள்:**

ஹுஸுர் அவர்களின் காலத்தில் விருந்தினர்களுக்கு உணவுக்கான சிறப்பான ஏற்பாடு இருந்தது. விருந்தினர்களின் விருப்பங்களை அறிந்து அதை நிறைவேற்றுவதில் ஹுஸுர் அவர்களுக்கு தனிக்கவனம் இருந்தது. எனது சகோதரர் ஹாபிஸ் ஹாமிது அலி சாஹிப் என்னிடம் கூறினார். ஒருமுறை ஆண்டு மாநாட்டின் சமயத்தில் 4 அண்டாக்களில் சோறு சமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இரண்டு அண்டாக்களில் இனிப்புச்சோறும் இரண்டு அண்டாக்களில் நெய்சோறும் சமைக்கப்பட்டது. ஒருநாள் ஹுஸுர் அவர்கள் அதிகாலையில் லங்கர்கானா சென்றார்கள். சமையல்காரரிடம் அண்டாக்களிலுள்ள மூடிகளை அகற்றும்படி கூறினார்கள். நாம் சோறைப் பார்க்க விரும்புகின்றோம் என்று கூறினார்கள். சமையல்காரர் மூடியை எடுத்ததும் ஹுஸுருக்கு உணவிலிருந்து நல்ல மணம் வரவில்லை. ஹுஸுர் மற்ற அண்டாக்களையும் திறந்து பார்த்தார்கள். பிறகு கூறினார்கள். இனிப்புச்சோறு சமைக்கப்படும் இரண்டு அண்டாக்களிலுள்ள உணவையும் குளத்தில் எறிந்து விடுங்கள். இவை நன்றாக இல்லை என்று கூறினார்கள்.

இந்த அண்டாக்களை பரிசோதனை செய்து பார்க்க வேண்டும் என்பதை அல்லாஹ் அவர்களது உள்ளத்தில் போட்டிருப்பான்.

நமக்கு இந்த உணவிலுள்ள மணம் விரும்பத்தகாததாக இருக்கும் போது நமது விருந்தினர்கள் இதனை எப்படி விரும்புவார்கள்? என்று ஹஸ்ரத் சாஹிப் கேட்டார்கள். பிறகு ஹுஸூர் அவர்களின் கட்டளை நிறைவேற்றப்பட்டது.

**மியான் மக்கன் கான் சாஹிப் அவர்களின் மகன் அல்லாஹ் தித்தா சாஹிப் எழுதுகின்றார்கள்:**

நான் 1906 ஆம் ஆண்டில் ஆண்டு மாநாட்டின் போது காதியான் வந்திருந்தேன். அப்போது ஹுஸூர் அவர்களின் இரண்டு சொற்பொழிவுகளை நான் கேட்டேன். முதல் சொற்பொழிவு காலை நேரத்தில் ஹுஸூர் அவர்களின் வீட்டில் வைத்து நிகழ்த்தப்பட்டது. அது இப்போது மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபின் வீடாகும். இதனை அமர்கின்ற இடம் என மக்கள் கூறி வந்தனர். இதற்கு வெளியில் இப்போது மாடிப்படிகள் கட்டப்பட்டுள்ளன. முதலில் அங்கு ஜன்னல்களும் ஒரு கதவும் இருந்தது. கதவின் அடையாளம் இப்போதும் கூட தென்படுகிறது. ஹுஸூர் அவர்கள் விருந்தினர்கள் குளிர்காய்வதற்காக நெருப்புக்கங்கு அடங்கிய ஒரு குளிர் காய்வதற்கான சட்டி ஒன்றை அனுப்பி வைத்தார்கள். குளிர் காலமாக இருந்ததால் இந்த ஏற்பாட்டை அவர்கள் செய்தார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழத்துவதற்காக மேலேயிருந்து கீழே இறங்கி வந்தார்கள்.

**மியான் அப்துல் அஸீஸ் சாஹிப் முகல் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஒரு நாள் நாங்கள் இரவு 8.00 மணிக்கு பட்டாலாவிற்கு வந்து சேர்ந்தோம். நாங்கள் 20 அல்லது 22 நபர்கள் இருந்தோம். நிலவின் ஒளி இருந்தது. அது கோடை காலமாக இருந்தது. முப்தி முஹம்மத் சாதிக் சாஹிபும் எங்களுடன் இருந்தார்கள். பாபு குலாம் முஹம்மத் சாஹிபும் எங்களுடன் இருந்தார்கள். நாங்கள் இரவு 11.30 மணிக்கு காதியான் வந்து சேர்ந்தோம். ஹுஸூர் வெளியே வந்தார்கள். ஹாபிஸ் ஹமீது அலி சாஹிப் அவர்களை குரல் கொடுத்து அழைத்தார்கள். அவரும் வந்தார். லங்கரில் ரொட்டி இருக்கின்றதா என்று பார்த்து வாருங்கள் என்று ஹுஸூர் கூறினார்கள். ஹுஸூர் இரண்டரை ரொட்டியும் கொஞ்சம் குழம்பும் உள்ளது என்று அவர்களிடம் கூறப்பட்டது. அதைக் கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள். மஸ்ஜிது முபாரக்கின் மேல் தளத்தில் வெள்ளைப் போர்வையை விரித்து அதில் ஹுஸூர் ஒரு பக்கம் அமர்ந்தார்கள். நாங்கள் எல்லாரும் அவர்களுக்கு அருகில் அமர்ந்தோம். ஹுஸூர் இந்த ரொட்டிகளை துண்டு துண்டாக ஆக்கி எங்களுக்கு முன்னால் அதைப் பரப்பி வைத்தார்கள். எனக்கு மிகவும் நன்றாக நினைவில் இருக்கின்றது. அப்போது நாங்கள் எல்லாருமே வயிறு நிரம்ப சாப்பிட்டோம். அதற்குப் பிறகும் சில ரொட்டித் துண்டுகள் எஞ்சியிருந்தன. அதே போர்வையில் அந்த துண்டுகளை வைத்து அதனைக் கொண்டு போனார்கள். மற்ற அறிவிப்புகளிலும் இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**மியான் முஹம்மது யாஸீன் சாஹிப் அஹ்மதி அரசு பள்ளியில் ஆசிரியராக இருந்தவர் எழுதுகின்றார்:**

குஜராத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் அமீருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆரம்ப நாட்களில் மிகக் குறைவாக மக்கள் வந்தார்கள். ஒருமுறை நாங்கள் 5 அல்லது 7 பேர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களாகத் தங்கியிருந்தோம். ஹுஸூர் சோறு நிரம்பியுள்ள அண்டாவை கொண்டு வந்து தாமாகவே சோறை அந்த பாத்திரத்தில் எடுத்துப் போட்டார்கள். எங்களுக்கு முன்னால் அதை வைத்து எங்களுக்கு உணவு பரிமாறினார்கள். எண்ணிக்கை வளர வளர லங்கர் கானா மற்றும் மற்ற நபர்கள் வசம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. எப்போதும் இவர்களை கவனித்து வாருங்கள் என்று ஹுஸூர் கட்டளையிட்டார்கள்.

**மியான் கரீம் பக்ஸ் சாஹிப் அவர்களின் மகன் மியான் குலாம் ஹுஸைன் சாஹிப் முஹாஜிர் எழுதுகின்றார்கள்:**

ஹுஸூர் அவர்கள் எப்போதும் இவ்வாறு வலியுறுத்திக் கூறி வந்தார்கள். பாருங்கள். மியான் குலாம் ஹுஸைன் விருந்தினர்களுக்கு எவ்வித துன்பமும் ஏற்படக் கூடாது என்று கூறுவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த சொற்கள் அன்று மியான் குலாம் ஹுஸைன் சாஹிப் அவர்களுக்கு எந்த

அளவு முக்கியமானதாக இருந்ததோ அவ்வாறு இன்று நமக்கு அந்த சொற்கள் முக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது.

எல்லா பணியாளர்களும் அல்லாஹ்விடம் துஆ செய்தவாறு முயற்சியும் செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு விருந்தோம்பல் என்ற கடமையை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

உணவு பரிமாறுவது மட்டுமின்றி எல்லா ஏற்பாடுகளும் விருந்தினர்களின் வசதிக்காகவே செய்யப்பட்டுள்ளன என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். எனவே எல்லா இடங்களிலும் உள்ள அனைத்து பணியாளர்களும் தங்களது கடமைகளை சிறந்த முறையில் செய்து முடிக்க முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் சிலரின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். இதில் ஒன்று ஜனாஸா ஹாஸிர் ஆகும். அது மதிப்பிற்குரிய ஷேக் முபாரக் அஹ்மத் சாஹிப் உடையதாகும். இவர் மதிப்பிற்குரிய கான் ஃபர்ஸந்த் அலி கான் சாஹிபின் மகனாவார். இவர் நீண்ட காலமாக இங்கு இருந்துள்ளனர். இவரது தந்தையாரையும் ஜமாஅத்திலுள்ள அனைவரும் நன்கறிவார்கள். 1929 -ல் இங்கிலாந்தில் இவர் இமாமாகவும் பணியாற்றியுள்ளார்கள். 1928 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்ற பிறகு இவர் தமது வாழ்வை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்திருந்தார்கள். இவர் நாஸிர் பைத்துல் மால் ஆகவும் நாஸிர் அஃலாவாக சில காலமும் இருந்துள்ளார்கள். ஆங்கிலேய அரசாங்கம் இவருக்கு கான் என்ற பட்டத்தை வழங்கியது. மதிப்பிற்குரிய ஷேக் முபாரக் அஹ்மது சாஹிப் இவரது மகனாவார்கள். ஜுலை 10 ஆம் தேதி இவர் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். தமது 90வது வயதில் இவர்கள் வஃபாத் ஆனார்கள். கொஞ்ச காலம் வரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் Assistant Private Secretary (துணை தனிச்செயலர்) ஆக தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்திருக்கிறது. பிறகு பாகிஸ்தானில் துணை நாஸிர் தஃலீம் ஆக தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது. 1961 -ல் இவர் U.K. வந்து விட்டார். தேசிய உமூரே ஆமா, ரிஸ்தா நாதா (திருமண உறவுகளை ஏற்படுத்தும் செயலர்) செயலராக மற்றும் பல துறைகளிலும் இவர் பணியாற்றியுள்ளார். ஜமாஅத்திற்காக தன்னை அர்ப்பணிப்பவராகவும் கிலாஃபத்துடன் ஆழ்ந்த பற்றுமிக்க உறவை இவர் வைத்திருந்தார். முதிர்ந்த வயதில் மிகவும் தளர்ந்து போன நிலையிலும் கூட முறையாக எனக்கு இவர் கடிதம் எழுதி வந்தார். ஒன்றிரண்டு முறை என்னை சந்திப்பதற்கும் இங்கு வந்துள்ளார். பொறுப்பாளர்களுக்கு இவர் மிகவும் கண்ணியம் அளித்து வந்தார். பொருள் தியாகத்தில் முன்னேறியவராக அவற்றில் பங்கு பெற்று வந்தார். தனது சந்ததிகளுக்கும் இது பற்றி அவர் போதனை செய்து வந்தார். தப்லீகிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. தன்னைச் சுற்றி இருப்பவர்களிடத்தில் ஏதாவதொரு வகையில் தூதுச் செய்தியை எட்ட வைத்து விடுவார்கள். இவருக்கு பின்னால் இவர் நான்கு மகள்களையும் இரண்டு மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் இவர்களது பெற்றோர்கள் மற்றும் இவர்களது தாத்தா போன்று ஜமாஅத்துடன் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாகவும் மனத்தூய்மை உடையவர்களாகவும் ஆக்குவாயாக! மர்ஹூம் அவர்களின் தகுதியை உயர்த்துவானாக!

நவாப் ஷாவை சார்ந்த மலிக் மப்ரூர் அஹ்மது சாஹிப் ஷஹீதுடைய ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். 2011 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11 ஆம் தேதி இரவு 8.15 மணிக்கு இவர் ஷஹீதாக்கப்பட்டார். இவர் வழக்கறிஞர் ஆவார். இவர் தனது வண்டியை வெளியில் கொண்டு வந்ததும் அருகில் வேறொரு வண்டியில் மறைந்திருந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் வண்டியிலிருந்து வெளியே வந்து இவரது பிதடியில் பிஸ்டலை வைத்து Firing செய்தார். தாக்குதல் நடத்தியவர் Firing செய்த பிறகு ஸ்டேஷன் பக்கம் ஓடிச் சென்று விட்டார். இவரது சகோதரரும் இவரது வண்டிக்கு அருகில் தான் இருந்தார். இவரது சகோதரரான மலிக் வஸீம் அஹ்மது சாஹிப் தாக்குதல் நடத்தியவருக்கு பின்னால் ஓடிச் சென்றார். அப்போது தாக்குதல் நடத்தியவர் இவர் மீது Firing செய்தனர். ஆனால் அல்ஹம்துலில்லாஹ் அவர் அதிலிருந்து தப்பி விட்டார். எவ்வாறிருப்பினும் மலிக் மப்ரூர் அஹ்மது சாஹிபின் ஷஹாதத் நிகழ்ந்து விட்டது.

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இதற்கு முன்னரும் இவரை கொலை செய்ய தாக்குதல் நடந்தது. இவருக்கு 50 வயதாகும். ஜமாஅத் ரீதியிலான எதிர்ப்புகளை தவிர தொழில் ரீதியாகவும் இவர் மீது பகைமை இருந்து வந்தது. ஒரு சாராரிடம் பகைமை இருந்தது என்று கூறலாம். அப்பகுதியில் கொலை செய்யப்பட்டவர்களுக்கு சாதகமாகவும் இவர் வழக்காடி வந்தார். இதனால் பகைமை இருந்து வந்தது. வேறு வகையிலும் பகைமை இருந்து வந்தது. ஆனால் எல்லாவற்றையும் ஜமாஅத்தில் அவர் இருந்து வருவதால் மற்றவர்களுக்கு அவர் மீதிருந்த பகைமைதான் மிகைத்திருந்தது. இவர் ஜமாஅத்திற்கும் தொண்டாற்றி வந்துள்ளார். குத்தாமுல் அஹ்மதிய்யாவில் ஜில்லாவின் நாஸிமாக அவர் பணியாற்றியுள்ளார். சொத்து செயலராகவும் இருந்து வந்தார். இப்போது நவாப்ஷா ஜமாஅத்தின் தலைவராக இருந்து வந்தார். காவல்துறையினருடன் இவருக்கு நெருக்கமான தொடர்பு இருந்தது. இந்த தொடர்பின் காரணமாக எந்த கேஸை இவர் எடுத்து நடத்தினாரோ அல்லது கொலை செய்யப்பட்ட எந்த நபருக்கு இவர் உதவி செய்தாரோ அவர்கள் சார்பாக இவர் வழக்குகளை வாதாடி நடத்தியதால் கொலை செய்தவர்கள் இவர்களுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்தார்கள். பிறகு அஹ்மதிய்யத்தின் காரணமாகவும் இவருக்கு மிரட்டல்கள் வந்தவண்ணமிருந்தது. இவரது ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன்.

மூன்றாவது ஜனாஸா காயிப் மதிப்பிற்குரிய ரஷியா பேகம் சாஹிபா உடையதாகும். இவர் ரப்வாவிலுள்ள தாருர்ரஹ்மத் வஸ்தியைச் சார்ந்தவராவார். இவர் ஜூன் மாதம் 25ம் தேதி வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியான மியான் அப்துல்லாஹ் சாஹிபின் மகனாவார்கள். கஸிஸ்க்தான் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். மிகவும் நல்லவர். இபாதத்தில் நாட்களைக் கழிப்பவராகவும் கிலாஃபத்துடன் ஆழ்ந்த பற்றுள்ளவராகவும் இவர் இருந்தார். ஜமாஅத் அமைப்புக்கு முழுமையாக ஒத்துழைப்பு கொடுத்து வந்தார். வறுமையில் வாடிய நிலையிலும் கூட தமது 24 வது வயதில் தமது வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவர் வஸிய்யத் செய்திருந்தார். சிறிது காலம் வரை கடுமையான பொருளாதார கஷ்டத்தின் காரணமாக வஸிய்யத்திற்கான தொகையை அவரால் செலுத்த முடியாமல் ஆகி விட்டது. அப்போது வஸிய்யத் அலுவலகத்திலிருந்தும் அவருக்கான வஸிய்யத்தின் பங்கை குறைத்துக் கொள்ளும்படி அவரிடம் கூறப்பட்டது. அதற்கு அவர் நான் அல்லாஹ்விடம் வாக்குறுதி செய்துள்ளேன். அவனே இதற்கான நல்வாய்ப்பை வழங்கியவாறு இதற்கான ஏற்பாட்டை செய்வான் என்று கூறிவிட்டார்கள். அல்லாஹ்வுடன் அவருடன் அதே விதமாகத்தான் பரிமாறினான். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தனது பாக்கி தொகை முழுவதையும் கடுமையான இரண்டு அல்லது மூன்று விபத்துகளை சந்திக்க நேர்ந்தது. ஒருமுறை இரயில் தண்டவாளத்திற்கு அருகில் நடந்து வந்த போது இரயில் அவர் மீது மோதி அவர் கடுமையாகக் காயமுற்றார். இதை தவிர பல விபத்துகள் நடந்தன. ஆனால் இந்த விபத்துகளையும் பல கஷ்டமான சோதனைகளையும் மிகவும் தைரியத்துடனும் பொறுமையுடனும் இவர் சகித்துக்கொண்டார். அவரது மகனான ஹஸன் தாஹிர் புஹாரி அவரது வஃபாத் சமயத்தில் வெளிநாட்டில் இருந்தார். அல்லாஹ் இவரது பதவியை உயர்த்துவானாக! இந்த எல்லா மர்ஹூமீன்களுக்கும் தனது மன்னிப்பை வழங்குவானாக!

ஒரு ஹாஸிர் ஜனாஸா வந்திருப்பதால் நான் பள்ளிவாசலுக்கு வெளியே சென்று ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். சகோதரர்கள் பள்ளிவாசலிலேயே இருக்க வேண்டுகின்றேன். இங்கிருந்தவாறே எனக்கு பின்னால் தொழுங்கள்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 15.07.2011**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**